நாள்.09.01.2024

**அசல் வழக்கு எண். 176/2020**

வா.சா.2 - பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதியின் தாத்தா பெயர் மாரிச்சாம்பான் என்றால் சரிதான். மாரிச்சாம்பானுக்கு எத்தனை பிள்ளைகள் என்றால் 2 பிள்ளைகள் என்றால் சரிதான். அவர்கள் பெயர்கள் 1. சீனிச்சாம்பான், 2. சின்னத்தம்பி. மாரிச்சாம்பானுக்கு சொந்தமான சொத்துகளை அவரது பிள்ளைகளுக்கு பாகமாக பிரித்துக் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த வகையில் வாதிகள் தாவா சொத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். தாவா சொத்திற்கு தென்புறம் உள்ள இடத்தின் சர்வே எண் 98/5 என்றால் சரிதான். புல எண் 98/5 என்னிடம் தான் உள்ளது என்றால் சரிதான். புல எண் 98/ 5 ல் உள்ள சொத்தை நான் கிரயம் செய்துகொள்ளவில்லை. எனக்கு சின்னத்தம்பி மகன் மாரிமுத்து என்பவரை தெரியும். புல எண் 98/5 ல் உள்ள சொத்தை உரிமைதாரரான மாரிமுத்து என்பவரிடம் கிரயம் செய்து கொடுக்கும் படி கேட்டதற்கு கிரயம் செய்து தருகிறேன் என சொன்னார். எங்கள் ஊரைச் சார்ந்த போஸ்ட் மாஸ்டர் மனோகரனைத் தெரியும். மனோகரன் என்பவர் ஊரிலுள்ள பிரச்சனைகளை பஞ்சாயத்து மூலம் பேசி முடித்து வைப்பார். தாவா சம்பந்தமாக போஸ்ட்மாஸ்டர் மனோகரன், ஆலம்பள்ளம் வீராச்சாமி ஆகியோர்கள் எதிர்வாதிகள் மீது தாக்கல் செய்துள்ள வழக்கு தவறானது என்று பஞ்சாயத்து செய்த விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. சீனிச்சாம்பானின் மூத்த மகன் நேடசனுக்கு சுமார் 75 வயது இருக்கும். 1ம் எதிர்வாதி தங்கராசுக்கு சுமார் 70 வயது இருக்கும் என்றால் சரிதான். எனக்கு என்ன வயது என்றால் 61. தாவா சொத்தின் தென்புறம் உள்ள புல எண் 98/5 உள்ள சொத்தையும், அதற்கு பக்கத்திலுள்ள சொத்துகளையும் நான் அனுபவம் செய்து வரும்போது எதிர்வாதிகளோடு பிரச்சனை இருந்து வருகிறதா என்றால் நிறைய பிரச்சனைகள் இருந்து வருகிறது.

மேற்படி எனக்கும், எதிர்வாதிகளுக்கும் பிரச்சனை இருந்து வருவதால் நான் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him/her to be Correct.*

Sd/- M. Ravichandran,B.A.,B.L.,

District Munsif, Pattukkottai.